**செய்திவெளியீடுஎண்:208** **நாள்: 25.03.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் இன்று (25.3.2018) சேலம் விமான நிலையத்தில், உடான் விமான சேவை திட்டத்தின் கீழ், சேலம்–சென்னை இடையே Trujet விமான நிறுவனத்தின் முதல் விமான சேவையை துவக்கி வைத்து ஆற்றிய உரை**

சேலம்–சென்னை புதிய விமான சேவை துவக்கவிழா நிகழ்ச்சியிலே வரவேற்புரை நிகழ்த்திய தமிழ்நாடு அரசினுடைய தலைமைச் செயலாளர் மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே, திட்ட விளக்கவுரை ஆற்றிய மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அரசு செயலாளர் மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய திரு.ராஜீவ் நயன் சௌபே அவர்களே, மற்றும் இந்த இனிய நிகழ்ச்சியிலே வாழ்த்துச் செய்தி சொல்லி, விமான போக்குவரத்து துவங்குவதற்கு அச்சாணியாக விளங்கிய மத்திய விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய திரு.சுரேஷ் பிரபு அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பான கருத்துக்களை எடுத்து வைத்த மத்திய நிதி மற்றும் கப்பல் போக்குவரத்துறை இணை அமைச்சர் மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய அண்ணன் பொன் ராதாகிருஷ்ணன் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வுத் துறை அமைச்சர் திரு.தங்கமணி அவர்களே, மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்களே, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் மருத்துவர் திருமதி வெ. சரோஜா அவர்களே, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு கே.சி.கருப்பணன் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்களே, மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற இந்த தொகுதியினுடைய பாராளுமன்ற உறுப்பினர் திரு.வி.பன்னீர்செல்வம் அவர்களே, இந்த தொகுதியினுடைய

சட்டப் பேரவை உறுப்பினர் திரு.வெற்றிவேல் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.பி.ஆர்.சுந்தரம் அவர்களே, திரு. காமராஜ் அவர்களே, மற்றும் நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இல.கணேசன் அவர்களே, மற்றும் நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற முன்னாள் அமைச்சர் திரு. செம்மலை அவர்களே, சட்டப்பேரவை உறுப்பினர் திரு.வெங்கடாசலம் அவர்களே, திரு ஏ.பி. சக்திவேல் அவர்களே, பி..மனோன்மணி அவர்களே, திரு.எஸ்.ராஜா அவர்களே, திரு.ஆர்.எம்.சின்னத்தம்பி அவர்களே, திரு.அ.மருதமுத்து அவர்களே, திருமதி கு.சித்ரா அவர்களே, திருகே.பி.பி.பாஸ்கர் அவர்களே, திரு.சி.சந்திரசேகரன் அவர்களே, திருமதி பொன்.சரஸ்வதி அவர்களே, மற்றும் நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற பாரதீய ஜனதா கட்சியினுடைய மதிப்பிற்கும், மதிப்பிற்குமுரிய டாக்டர் திருமதி தமிழிசை சௌந்திரராஜன் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற பாரதீய ஜனதா கட்சியின் முன்னோடி நிர்வாகி மரியாதைக்குரிய திருமதி வானதி சீனிவாசன் அவர்களே, மற்றும் மாநில கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு.ஆர். இளங்கோவன் அவர்களே, பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு.ஆர்.சின்னுசாமி அவர்களே, மற்றும் ட்ரூஜெட் விமான நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு.பிரேம்குமார் பாண்டே அவர்களே, ட்ரூஜெட் விமான நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி திரு.விஷாக் மான்சிங் அவர்களே, சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரோஹிணி ரா.பாஜிபாகரே அவர்களே, மற்றும் நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற கழகத்தினுடைய முன்னோடி நிர்வாகிகளே, பாரதீய ஜனதா கட்சியினுடைய முன்னோடி நிர்வாகிகளே, வருகை தந்திருக்கின்ற அரசு உயர் அதிகாரிகளே, விமான போக்குவரத்துத் துறையிலே பணியாற்றக்கூடிய ஊழியர்களே, வருகை தந்திருக்கின்ற பெரியோர்களே, தாய்மார்களே, எல்லாவற்றுக்கும்

மேலாக, தொழிலதிபர்களே, ஊடக நண்பர்களே, பத்திரிகை நண்பர்களே, அனைவருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த உடான் விமான சேவை திட்டத்தின் கீழ் இன்றையதினம் சென்னையிலிருந்து சேலம் வரையிலும், சேலத்திலிருந்து சென்னை வரையிலும் முதன்முதலாக இந்த விமானசேவை துவங்கப்பட்டிருக்கின்றது.

**"பறவையை கண்டான் விமானம் படைத்தான்"** என்று பாடினார் நமது கவியரசர் கண்ணதாசன் அவர்கள். ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு விரைவாக செல்வதற்காக ரைட் சகோதரர்களால் கண்டு பிடிக்கப்பட்டதுதான் விமானம். ஆரம்பத்தில் விமான சேவை மிகவும் வசதி படைத்தவர்களுக்கு மட்டுமே பயன்பட்டு வந்தது. விமான சேவை என்பது ஏழை எளிய மக்களுக்கு எட்டாத கனியாக இருந்தது. இதனை அவர்களுக்கு எட்டச் செய்யும் வகையில் குறைந்த செலவில், குறைவான நேரத்தில் சிறு நகரங்களை பெருநகரங்களுடன் இணைக்கும் வகையில் **21.10.2016–ல்** மண்டலங்களுக்கு இடையேயான விமான போக்குவரத்து **உடான் திட்டம்** பாரதப் பிரதமர் அவர்களால், மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

நாட்டில் உள்ள விமான ஓடுதளங்கள் மற்றும் விமான நிலையங்களை மேம்படுத்துதல், பயன்பாட்டில் இல்லாத மற்றும் குறைவான பயன்பாட்டில் உள்ள விமான நிலையங்களிடையே இணைப்பினை ஏற்படுத்துதல், மண்டலங்களுக்கு இடையே விமான போக்குவரத்தை ஏற்படுத்தி பெருநகரங்களை சிறு நகரங்களுடன் இணைத்தல், குறைந்த விலையில் விமான பயணம் செய்யும் நிலை உருவாக்குதல் ஆகியவையே இந்த **'உடான்'திட்டத்தின்** முக்கிய குறிக்கோள்களாகும்.

நாட்டிலுள்ள சிறு நகரங்களில் விமான சேவை துவங்குவதற்காக பயன்பாட்டில் இல்லாத மற்றும் குறைவான பயன்பாட்டில் உள்ள **13** விமான நிலையங்களை மத்திய விமான போக்குவரத்து அமைச்சகம் தேர்வு செய்தது. இதன் முதல் கட்டமாக, தமிழ்நாட்டிலுள்ள **சேலம் மற்றும் நெய்வேலி** ஆகிய இடங்களை தேர்வு செய்து, விமானங்களை இயக்க முடிவு செய்யப்பட்டது.

இந்த திட்டத்தின் பயனை அறிந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, இத்திட்டத்தினை தமிழ்நாட்டில் செயல்படுத்தும் வகையில், மத்திய விமான போக்குவரத்து அமைச்சகத்துடன் **8.6.2017** அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது. அப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை செயல்படுத்தும் விதமாக

i. **உடான் திட்டத்தின்** கீழ் இயக்கப்படும் விமானங்களுக்கு பெறப்படும் விமான எரிபொருள் (Aviation Turbine Fuel) மீதான மதிப்பு கூட்டு வரி ஒரு சதவீதமாக குறைத்து தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

ii. இத்திட்டத்தின் கீழ் செயல்படும் விமான நிலையங்களுக்கு பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு பணிகளை மாநில அரசு கட்டணம் ஏதுமின்றி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

iii. இத்திட்டத்தின் கீழ், விமான இயக்கம் செலவிற்கு 20 சதவிகித கடன் ஈட்டு இடைவெளி நிதியினை (Viability Gap Funding) தமிழ்நாடு அரசு வழங்க உள்ளது.

இந்த சலுகைகளை பயன்படுத்தி விமான நிறுவனங்கள் குறைந்த பயணக் கட்டணத்தில் விமான சேவை வழங்கும். இதனால் சாதாரண மக்களும், விமான சேவையை பயன்படுத்தும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் முதன் முதலில் **'உடான்' திட்டத்தின்** மூலம் இன்று துவக்கப்பட்டுள்ள விமான சேவையை துவக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அதுவும் சேலம் மாவட்டத்தில் இந்த திட்டம் முதன் முதலில் துவக்கப்படுவதை எண்ணி உள்ளபடியே எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இதன் மூலம் நம்முடைய, அருகிலுள்ள சேலம் மாவட்டம் உட்பட ஈரோடு, நாமக்கல், கரூர், கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களைச் சார்ந்த வணிகர்கள், படித்த இளைஞர்கள், நடுத்தர வகுப்பினர் மற்றும் பலர் மிகுந்த பயன் அடைவார்கள்.

மேலும், சேலத்தில் பெரியரக விமான சேவை துவக்குவதற்கு ஏதுவாக விமான நிலைய விரிவாக்க பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. விரிவாக்கத்திற்குப் பிறகு சேலம் விமானநிலையத்திலிருந்து பெரிய ரக விமானமும் இயக்கப்படும்.

இதே போன்று, தமிழ்நாட்டிலுள்ள பிற விமான நிலையங்களை உலகத்தரத்திலான விமான நிலையங்களாக தரம் உயர்த்த மாண்புமிகு அம்மாவின் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது.

சென்னை விமான நிலைய விரிவாக்கத்திற்கு தேவையான 229.17 ஏக்கர் நிலத்தில், 129.80 ஏக்கர் நிலம் இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திற்கு ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள 99.37 ஏக்கர் நிலத்திற்கு, நில எடுப்பு செய்வதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டு, நில மதிப்பு நிர்ணய பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், இத்திட்டத்திற்காக 35.97 ஏக்கர் ராணுவ நிலங்களை இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திற்கு நில மாற்றம் செய்திட துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மதுரை விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்கு தேவையான **615.92** ஏக்கர் நிலத்தில், **466.43** ஏக்கர் பட்டா நிலங்களுக்கு நில மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டு இடைக்கால நில மதிப்பு தொகையாக **166** கோடியே **69** லட்சத்து **39** ஆயிரத்து **754** ரூபாய் வழங்குவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் விமான நிலைய விரிவாக்கத்திற்கு தேவையான **627.89** ஏக்கர் நிலத்தில், **461.90** ஏக்கர் பட்டா நிலங்களுக்கு நில மதிப்பினை மறு பரிசீலனை செய்ய குழு ஒன்று அமைக்கப்பட்டு நில மதிப்பினை மறு நிர்ணயம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், **134.32** ஏக்கர் ராணுவ நிலங்களை இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திற்கு நில மாற்றம் செய்திட துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கத்திற்கு தேவையான **605.93** ஏக்கர் நிலத்தில், **366.24** ஏக்கர் நிலம் இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள **238.76** ஏக்கர் நிலத்திற்கு நில மதிப்பீடு செய்யப்பட்டு, நில மதிப்பீட்டு தொகையாக **9** கோடி ரூபாய் **2018–2019** நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருச்சி விமான நிலைய விரிவாக்கத்திற்கு **345.62** ஏக்கர் பட்டா மற்றும் புறம்போக்கு நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிர்வாக அனுமதி **4.5.2017** அன்று வழங்கப்பட்டு, நில எடுப்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. மேலும், **164.88** ஏக்கர் ராணுவ நிலங்களை திருச்சி விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்காக இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திற்கு நில மாற்றம் செய்திட துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அடுத்த கட்டமாக **'உடான்'** திட்டத்தின் மூலம் **வேலூர் மற்றும் தஞ்சாவூரிலிருந்து** விமான சேவை துவக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகாய வழி போன்றே தரைவழியிலும் விரைவாக செல்லுவதற்கு ஏதுவாக தமிழ்நாட்டில் சாலை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் மத்திய அரசும், தமிழ்நாடு அரசும் இணைந்து 10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னைக்கும் சேலத்திற்கும் பசுமை விரைவு வழித்தடம் அமைக்க முடிவு செய்யப்பட்டு, மத்திய அரசின் பரிசிலனையில் உள்ளது.

இந்த திட்டத்தினை செயல்படுத்தியதன் மூலம் சென்னை – சேலம் மாநகரங்களுக்கு இடையான பயண தூரம் 60 கி.மீ குறைவதுடன் பயண நேரம் 6 மணி நேரத்திலிருந்து 3 மணி நேரமாக குறையும்.

இந்த திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் முதல் பசுமை விரைவு வழித்தடம் திட்டம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறைந்த காலத்தில் சேலத்திலிருந்து விமான சேவை துவங்க நடவடிக்கை எடுத்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய விமானப் போக்குவரத்துத் துறை செயலாளர் அவர்கள், அவர்தான் நமக்கு உண்மையிலேயே அவர் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு, சேலத்திற்கு முதன்முதலாக விமான சேவையை தொடங்க வேண்டுமென்று எடுத்துக் கொண்ட வகையிலும் அவர் நம்முடைய மரியாதைக்குரிய விமானப் போக்குவரத்துத் துறை செயலாளர் அவர்கள் அவருக்கும் இந்த நேரத்திலே நன்றியை தெரிவித்துக் கொள்ள

கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, இன்றையதினம் மத்திய அரசாங்கத்தின் மூலமாக இன்றைக்கு தமிழ்நாட்டிற்கு ஏராளமான திட்டங்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றது.

இன்றைக்கு எதிர்க்கட்சிகள் பல இன்றைக்கு மத்திய அரசோடு தமிழ்நாடு அரசு இணைந்து செயல்படுவது பிடிக்கவில்லை. ஏனென்று சொன்னால், மத்தியிலே அரசாங்கம் இருக்கின்றது, மாநிலத்திலே அரசாங்கம் இருக்கின்றன்து. ஆகவே, மாநில அரசு, மத்திய அரசோடு இணைந்து பணியாற்றினால்தான், மாநில மக்களுக்குத் தேவையான திட்டங்கள், நன்மைகள் கிடைக்கும். ஆகவேதான், மத்திய அரசோடு இணைந்து, மாண்புமிகு பாரதப் பிரதமர், நாம் எடுத்துவைத்த கோரிக்கைகளில் பல கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்திருக்கின்றார். வீடுகள் கட்டுகின்ற திட்டத்தில், தமிழ்நாட்டிற்கு எத்தனை வீடுகள் வேண்டுமானாலும் நாங்கள் தருகின்றோம், எத்தனை லட்சம் வீடுகள் வேண்டுமானாலும் ஏழை மக்களுக்குத் தருகின்றோம் என்ற வாக்குறுதியை தந்திருக்கின்றார். இதனால், வீடு இல்லாத ஏழை, எளிய மக்கள் பயன்பெறுகின்றார்கள். ஆகவே, நாம் மத்திய அரசோடு இன்றைக்கு ஒரு இணக்கமான உறவு வைத்திருக்கின்ற காரணத்தினாலே, இந்தத் திட்டத்தின் மூலமாக ஏழை மக்களுக்கு தேவையான வீடுகள் கிடைக்கின்றன. அதேபோல், தொழில்வளம் பெருக வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு உட்கட்டமைப்பு வசதிகள் மிக முக்கியம். அந்த உட்கட்டமைப்பு வசதிகள் மிக முக்கியமாக செயல்படுத்தினால்தான், தொழில் வளம் பெருகும். ஆகவே, உட்கட்டமைப்பு வசதிகளை இன்றைக்கு அதிக அளவிலே தமிழகத்திலே உருவாக்குவதற்கு மத்திய அரசு துணை நிற்கின்றது. இன்றைக்கு மத்திய அரசு, பல்வேறு சாலைகளை விரிவுபடுத்தக்கூடிய சூழலையெல்லாம் பார்க்கின்றோம். ஆகவே, அந்த திட்டத்தின் வாயிலாகத்தான், நமக்கு முதன்முதலாக

சேலத்திலிருந்து சென்னை வரை பசுமை சாலைகள் (Green Corridor) இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கின்றார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். அது மட்டுமல்ல, சேலத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, அதை குறைக்கவேண்டும் என்று மத்திய, தரைவழி, கப்பல் போக்குவரத்து அமைச்சரிடத்திலே சொன்னவுடன், புறவழிச்சாலை அமைத்துக் கொடுக்கப்படும் என்று வாக்குறுதியைத் தந்து அதை சென்னையிலே அறிவித்துவிட்டுச் சென்றிருக்கின்றார். இன்றைக்கு நாமக்கல்—சேலம் இருக்கின்ற தேசிய நெடுஞ்சாலையில் ஆட்டையாம்பட்டி பிரிவிலிருந்து பிரிந்து வெண்ணந்தூர், ஆட்டையாம்பட்டி, காக்காபாளையம், இளம்பிள்ளை கே.ஆர்.தோப்பூர், முத்துநாயக்கன்பட்டி வழியாக ஓமலூர் வரை அந்த புறவழிச்சாலை வந்து இணைகிறது, சுமார் 42 கிலோமீட்டர் அந்த சாலை அமையவிருக்கின்றது. அப்படி அமைகின்றபொழுது, போக்குவரத்து நெரிசல் இல்லாத ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்க முடியும். ஆகவே, இன்றைக்கு உட்கட்டமைப்பு வசதிகள் அதிகமாக நாம் உருவாக்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, புதிய, புதிய தொழில்கள் தமிழகத்திலே வருவதற்கு இன்றைக்கு பல்வேறு தொழிலதிபர்கள் நம்மோடு தொடர்பு கொண்டு பேசிக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவேண்டும் என்று தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதேபோல் ஏற்றுமதியை ஊக்குவிக்கின்ற விதத்திலே, இன்றைக்கு கப்பல் போக்குவரத்து மிக முக்கியம். ஆகவே, தூத்துக்குடியிலே கப்பல் போக்குவரத்தை விரிவுபடுத்துகின்ற தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. அதேபோல், இன்றைக்கு கன்னியாகுமரியிலே மரியாதைக்குரிய அண்ணன் மத்திய இணை அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன் அவர்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார். ஆகவே, இன்றைக்கு ஆயிரக்கணக்கான கோடி திட்டத்திலே, அங்கே ஒரு துறைமுகம்

அமைப்பதற்கான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டிருக்கின்றார், பாரதப் பிரதமரும் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா இருக்கின்றபொழுதே, அங்கே ஒரு துறைமுகம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை அனைவரிடமிருந்தும் வரப்பெற்றது. ஆகவே, அங்கேயும் மத்திய அரசு இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மாநில அரசு அனைத்து ஒத்துழைப்பும் நல்கும் என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். தொழில் வளம் பெருகினால்தான், இன்றைக்கு வேலைவாய்ப்பை பெருக்க முடியும். புதிய, புதிய தொழில்கள் வருவதன் மூலமாக, படித்து பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரமுடியும். அதன் மூலம் பொருளாதார மேம்பாடு அடைய முடியும். ஆகவே, இவை அனைத்தும் கிடைக்க வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும், அதேபோல ஏற்றுமதியை ஊக்கப்படுத்த வேண்டும். ஆகவே, இரண்டும் செய்தால்தான் தொழில் வளர்ச்சி காண முடியும். அந்த வகையிலே, இன்றைக்கு தமிழ்நாடு அரசால் அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அதற்கு மேலாக, ஓசூர், கோயம்புத்தூர், சேலம் போன்ற பகுதியிலே இன்றைக்கு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர், இங்கே பாதுகாப்புத் துறைக்குத் தேவையான உதிரிபாகங்கள் அமைக்கக்கூடிய தொழிற்சாலை அமைக்கப்படும் என்ற நற்செய்தியையும் சொல்லியிருக்கின்றார்கள். மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி புதிய தொழிற்சாலை வருகின்றபொழுது, இங்கே படித்த, வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படும். இதனால், மக்களுக்குத் தேவையான நன்மைகள் கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இன்றைக்கு புதிதாக

சென்னையிலிருந்து சேலத்திற்கும், சேலத்திலிருந்து சென்னைக்கும் உடான் விமான சேவை போக்குவரத்து சேவையை துவக்கிய மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும், மத்திய விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மத்திய விமான போக்குவரத்துத் துறை செயலாளர் அவர்களுக்கும் நம்முடைய நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்து, மிகச்சிறப்பான இந்த விழாவிற்கு வருகை தந்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றியை தெரிவித்து, வருகை தந்துள்ள பத்திரிகையாளர் மற்றும் ஊடக நண்பர்களுக்கும், மேடையிலே வீற்றிருக்கின்ற அத்தனை முக்கியத் தலைவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து விடை பெறுகின்றேன்.

நன்றி !

வணக்கம் !

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**